


திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத்தின் வேர்களைத் தேடி என்ற தலைப்பில், கழகத்தின் ஆணிவேராகத் திகழும் கிளைக் கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வின் தொடர்ச்சியாக ஆர்.கே.பேட்டை வடக்கு ஒன்றியம் ஸ்ரீ காளிகபுரம் கிளைக் கழக நிர்வாகிகளை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், சந்தித்து உரையாடினார் உடன் ஆர்.கே.பேட்டை வடக்கு ஒன்றிய செயலாளர் சி.என்.சண்முகம்,ஸ்ரீ காளிகபுரம் கிளைசெயலாளரகள் பிச்சாண்டி, வி.ஜி. மோகன்,தங்கவேல்,பாலபுரம் மணி, சாரதி, மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் பலர் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.



மாவீரன் ஒண்டிவீரன் 255 வது நினைவு நாளை முன்னிட்டு பல்லாவரம் சட்டமன்ற தொகுதியின் முன்னாள் உறுப்பினர் இ. கருணாநிதி மண்டல தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை, அருந்ததி கட்சி மாநில பொதுச் செயலாளர் பா. தேவேந்திரன் ஆகியோர் பல்லாவரத்தில் அலங்கரித்து வைக்கப்பட்ட திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். அதை தொடர்ந்து அன்னதானமும் வழங்கப்பட்டது அப்பொழுது வட்டக் கழக செயலாளர் பி. பரமசிவம் வட்டக் கழக நிர்வாகிகள் அருந்ததி கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்

# சிவகங்கை நகர் மன்ற தலைவர் துரைஆனந்த் இல்ல விழா!

## முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை!

சிவகங்கை, ஆக. 24-

சிவகங்கை நகர்மன்ற தலைவர், நகர் கழக செயலாளர்சி.எம்.துரை.ஆனந்த். திருமதி ஆனந்தி ஆனந்த் இவர்களது பேரன் ஏ.ஹெச். ப்ரணவ். காதணி விழா வருகிற 30ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி அளவில் சிவகங்கை ராயல் மகாலில் நடைபெறுகிறது.

முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்டக் கழக செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன், முன்னாள் அமைச்சர்கள் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், எம்.எல்.ஏ, எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ, பி.மூர்த்தி, மாநில தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் டி.ஆர்.பி.ராஜா, முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர். ப.சிதம்பரம் எம்.பி. கோவை காமாட்சிபுரம் ஆதீனம் ஆகியோர் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், தொழிலதிபர் மோகன்ராம், முன்னாள் எம்.எல்.ஏக்கள் வே.ராஜசேகரன், எஸ். குணசேகரன், திருமதி தமிழரசி ரவிக்குமார், கார்த்தி ப.சிதம்பரம் எம்.பி. முன்னாள் ஒன்றிய அமைச்சர் இ.எம்.சுதர்சன நாச்சியப்பன், இரா.கற்பூர சுந்தர பாண்டியன், ஐ.ஏ.எஸ். வழக்கறிஞர் தலைமை செயற்குழு உறுப்பினர் ரகு பாலாஜி, தஞ்சை ஜீவானந்தம், உயர்நீதிமன்ற வழக்கறிஞர்இராஜா செந்தூர பாண்டியன், டி.ஜி. புல்லட் சுரேஷ், மாநிலக் கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் மருது அழகுராஜ், முரசொலி ஆசிரியர் சேது, முரசொலி துணை ஆசிரியர் மு.முத்தையா ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

சிவகங்கை தெற்கு ஒன்றிய செயலாளர் எம். ஜெயராமன் வரவேற்று பேசுகிறார். காதணி விழாவில் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், பல்வேறு அரசியல் பிரமுகர்கள் வாழ்த்துரை வழங்குகிறார்கள் நகர் மன்ற உறுப்பினர் சுப .ஜெயகாந்தன் நன்றி கூறுகிறார்.

காதணி விழா ஏற்பாடுகளை நகர் கழக செயலாளர் சி.எம்.துரை.ஆனந்த், திருமதி ஆனந்தி ஆனந்த், மகன் ஹரிகரன், மருமகள் நாகபிரியதர்ஷினி, மகள் மருத்துவர். எம்.ஹரிணி, மருமகன் அ.முத்துமாரிகார்த்திக் மற்றும் குடும்பத்தினர் செய்து வருகிறார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திமிரி நா. சீனிவாசன்
### ஆகஸ்ட் 24 (2018)



தனது இளம் வயதிலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்

இருபது ஆண்டுகளுக்கும் மேலாக திமிரி ஒன்றியக் கழகச் செயலாளராக தொடர்ந்து பணியாற்றியவர். தலைமைச் செயற்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## தென்காசியில் 5ஆம் நூற்றாண்டு கல்வெட்டு கண்டுபிடிப்பு!

தென்காசி, ஆக.24-

தென்காசி மாவட்டம்,மலையடிப்பட்டி அகழாய்வில், படிக்கட்டுடன் கூடிய சங்ககாலச் செங்கல் கிணற்றில் இருந்து கி.பி. 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதத்தக்க நடுகல் கல்வெட்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

தமிழி எழுத்து முறையில் இருந்து வட்டெழுத்தாகத் தமிழின் வரிவடிவம் உருமாறிய காலத்தைச் சேர்ந்த இக்கல்வெட்டில், "கருக்கண் சுளகன் நன்னங்கொடியன்" என்ற பெயர் இடம்பெற்றுள்ளது.

புலிமான் கோம்பை, ஆப்பனூர், மல்லிகாபுரம் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட நடுகற்களைப் போலவே வீரரின் உருவம் பொறிக்கப்படாமல், எழுத்தின் வழியே நினைவைப் பதிவு செய்திருப்பது, அக்காலத் தமிழர்களின் எழுத்தறிவு, வீர மரபு மற்றும் பண்பாட்டு நுண்ணுணர்வை வெளிப்படுத்தும் அரிய சான்றாக அமைந்துள்ளது.

ஆயிரம் ஆண்டுகளைக் கடந்தும் நமது மண்ணில் நிலைத்திருக்கும் இத்தகைய கல்வெட்டுகள், தமிழரின் தொன்மையையும் தனித்துவமான பண்பாட்டு அடையாளத்தையும் உலகிற்கு எடுத்துரைக்கும் பெருமைமிகு வரலாற்றுப் பக்கங்களாகத் திகழ்கின்றன.

### கனிமொழி கருணாநிதி எம்.பி. முன்னிலை! அன்வர் ராஜா தலைமை!

# தி.மு.க. தலைமை இலக்கிய அணியின் ஆலோசனைக் கூட்டம்!

## இணைச் செயலாளர் நந்தனம் ச.நம்பிராஜன் அறிவிப்பு!

சென்னை, ஆக.24-

தி.மு.க. தலைமை இலக்கிய அணி இணைச் செயலாளர் நந்தனம் ச.நம்பிராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழக துணைப் பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி முன்னிலை வகிக்கிறார். இலக்கிய அணி தலைவர் அன்வர் ராஜா தலைமை வகிக்கிறார்.

எல்லோருக்கும் எல்லாம் என்னும் திராவிட மாடல் ஆட்சியின் கழகத் தலைவர் தளபதியாரின் வழியில் கழக முப்பெரும் விழா இவ்வாண்டு பட்டிதொட்டி எங்கும் சிறப்புடன் விழாக்கோலம் பூண்டிட கழக இலக்கிய அணி சார்பில் ஆலோசனைக் கூட்டம் 28.8.2026 காலை 10:30 மணி அளவில் அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தலைமை இலக்கிய அணி நிர்வாகிகள் மற்றும் மாவட்டக் கழக இலக்கிய அணி அமைப்பாளர்கள் அனைவரும் அவசியம் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### நாகர்கோவில் மாநகர வடக்குப் பகுதி

# 6 வது வட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் ஆலோசனை வழங்கினார்!



கன்னியாகுமரி, ஆக.24-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர வடக்கு பகுதி, 6 வது வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது 6வது வட்ட கழக செயலாளர் எம்.கே.ராஜன் தலைமையில், நாகர்கோவில் மாநகர வடக்கு பகுதி செயலாளர் இ.ஜவகர் முன்னிலையில் 19.08.2026, புதன்கிழமை அன்று மாலை 6.30 மணியளவில் நாகர்கோவில், பள்ளிவிளை, ரேஷன் கடை அருகில் உள்ள ராஜேந்திரன் இல்ல வளாகத்தில் வைத்து நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக நிர்வாகி களுக்கு ஆலோசனைகள் வழங்கினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் நாகர்கோவில் மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் N.ராஜேஷ், மாநகர தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். பார்த்தீபன், கழக நிர்வாகிகள் N.ராஜேந்திரன், M.K.சேகர், T.பிரபுசங்கர், N.சிவலிங்கம், செ.மணிகண்டன், A.பரந்தாமன், சி.சிம்சோன் உட்பட பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது.

வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப் பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப் பட்டது.

கழக பணியினை தொய்வின்றி நடத்த கழக தலைவர் கட்டளையை ஏற்று நடக்கவும், மாவட்ட கழகம் அறிவிக்கும் பணிகளை செவ்வனே நிறைவேற்றி கழகம் மீண்டும் ஆட்சி அமைக்க அயராது பாடுபட வேண்டும் என தீர்மானிக் கப்பட்டது.

கடந்த தமிழ்நாடு சட்ட மன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் நாகர்கோவில் மாநகர வடக்கு பகுதி கழகம் சார்பாக நன்றி தெரிவிக் கப்பட்டது.

### ஜெயங்கொண்டம் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்

# க.சொ.கணேசன் 21 ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்ச்சி!

## நினைவிடத்தில் மாலை அணிவித்து கழகத்தினர் மரியாதை!

அரியலூர், ஆக. 24-

அரியலூர் மாவட்டம் செயங்கொண்டம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், மொழிப்போர் தியாகி மறைதிரு க.சொ.கணேசன் அவர்களின் 21 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தா.பழூர் ஒன்றியம் கண்டியங்கொல்லை கிராமத்தில் அமைந்துள்ள அவரது நினைவிடம், மற்றும் திருவுருவச் சிலைக்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அதனை தொடர்ந்து தா.பழூரில் அமைதி ஊர்வலம் நடைபெற்றது.

இந்நிகழ்வுகளில் மாவட்ட துணை செயலாளர் மு.கணேசன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் சி.ஆர்.எம். பொய்யாமொழி, ஆர்.எம்.அன்பழகன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் ஜெயங்கொண்டம் மத்தியம் இரா.மணிமாறன், தா.பழூர் மேற்கு ப.தனவேல், ஜெயங்கொண்டம் மத்தியம் நா.கணேசன்,


ஜெயங்கொண்டம் நகர செயலாளர், நகராட்சி துணைத் தலைவர் வெ.கொ.கருணாநிதி,

தி.க. ஒன்றிய செயலாளர் வெங்கடாசலம் மாவட்ட அணி அமைப்பாளர்கள் எம்.ஜி.இராஜேந்திரன், எஸ்.ஆர்.இராமராஜன், கொண்டியார் செல்வராஜ், து.ப.புனிதவேல்,தா.பழூர் ஒன்றிய நிர்வாகிகள்

அவைத்தலைவர் எஸ். சூசைராஜ்,ஒன்றிய கழக துணை செயலாளர் அ.இராஜேந்திரன்,இந்துமதி நடராஜன்,மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.ஆர்.தமிழ்செல்வன்,சி. கண்ணதாசன், மாவட்ட அணி துணை அமைப்பாளர்கள் இரா.சங்கர், ந. கார்த்திகைகுமரன்,த.குணசீலன்,தங்கபிரகாசம்,மா.சங்கர்,எழிலரசி அர்ச்சுனன், நீல.மகாலிங்கம், தா.பழூர் நகர செயலாளர் கண்ணன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள்,சார்பு அணிகளின் நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள்,தோழமைக் கட்சியினர் மற்றும் கழக உடன்பிறப்புகள் பெருந்திரளாக கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வழக்கறிஞர் அ.மு. அசன் முகம்மது
### ஆகஸ்ட் 24 (2016)



இளம் வயதிலேயே திராவிட இயக்கத்தின்மீது பற்று கொண்டு, மாவட்ட பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட வழக்கறிஞர் அணி புரவலர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

கவிதை, கட்டுரை எழுதுவதில் வல்லவரான இவர், மிசா நெருக்கடி காலத்தில், கழக நாளேடான 'முரசொலி'யில் துணை ஆசிரியராக பணியாற்றியவர்.

திருவாரூர் மாவட்டம், அத்திக்கடை ஊராட்சி துணைத் தலைவராக பொறுப்பேற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் முதல் கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.